**BEFORE THE II ADDITIONAL LABOUR COURT AT CHENNAI**

**DEPOSITION OF WITNESS**

---

**Case No. : OP.226/2024** **Date : 23.09.2025**

Deposition of : WW1

Name : Mr. N.Hari Venkatakrishnan

Age : 56years

Father's Name : Mr. N. Narayana Prasad

Address :

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).**

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. எனக்கு வழங்கப்பட்ட pendrive ன் copy இதுதான். **(Pendrive Ex.M10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரிவு 63(4)BSA ன் கீழான சான்றிதழ் இல்லை என்பதால் அதை குறியீடு செய்ய இயலாது என்று ஆட்சேபிக்கப்பட்டது. மேற்படி ஆவணம் விசாரணை அதிகாரி முன்னிலையில் குறியீடு செய்யப்பட்ட ஆவணம் என்பதாலும், Strict Rules of Evidence are not applicable to the Labour Court என்பதாலும் ஆட்சேபனை நிராகரிக்கப்பட்டது.)** 16.10.2023 அன்று விசாரணை அதிகாரியிடம் 13,14 மற்றும் 20.07.2023 க்கான Petty cash vouchers ஐ திரு.ருத்ர நாராயணனிடம் இருந்து பெற்றுத்தருமாறு இந்த கடிதம் மூலம் கேட்டேன் என்றால் சரிதான். **(16.10.2023 தேதியிட்ட கடிதம் Ex.M.11 ஆக குறியீடு**

LINGESWARAN DHARMALINGAM

Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.23 17:16:00 +0530

**செய்யப்படுகிறது.)**

2. மேற்படி எனது கடிதத்திற்கு நிர்வாகம் கொடுத்த 18.10.2023 தேதியிட்ட கடிதம் இதுதான் என்றால் சரியல்ல. Ex.W6 என்னிடம் வழங்கப்பட்டு அதற்கான விளக்கம் என்னிடம் கோரப்பட்டது என்றால் சரிதான். 16.12.2023 அன்று விளக்கம் அளிக்க எனக்கு இன்னும் சிறிது கால அவகாசம் வேண்டும் என்று நான் எழுதிய கடிதத்தின் நகல் இதுதான்.**(16.12.2023 தேதியிட்ட கடிதம் Ex.M12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன்படி எனக்கு 22.12.2023 வரை காலஅவகாசம் நீட்டித்து நிர்வாகம் வழங்கிய கடிதம் இதுதான்.**(19.12.2023 தேதியிட்ட கடிதம் Ex.M13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. விசாரணை அறிக்கைக்கான விளக்கம்தான் Ex.W8 என்றால் சரிதான். நான் விளக்கம் கொடுத்த பிறகு 2வது முறையாக நிர்வாகம் என்னிடம் விளக்கம் கோரியதற்கான கடிதம் தான் Ex.W9 என்றால் சரிதான். 2வது முறை விளக்கம் கேட்ட போது அதற்கும் கால அவகாசம் கேட்டு நான் கொடுத்த கடிதத்தின் நகல்தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் ஆகும்.**(கால அவகாசம் கோரிய கடிதம் Ex.M.14 ஆக குறியீடு**

LINGESWARAN DHARMALINGAM
Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.23 17:16:16 +0530

**செய்யப்படுகிறது.)**

4. அதன்படி காலஅவகாசம் வழங்கி நிர்வாகம் கொடுத்த கடிதத்தின் நகல்தான் இது.(**30.01.2024 தேதியிட்ட கடிதம் Ex.M15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** எப்போதெல்லாம் நான் விசாரணை அதிகாரியிடமும் நிர்வாகத்திடமும் கால அவகாசம் கேட்டேனோ அப்போதெல்லாம் எனக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் Ex.M2 வரிசையின் 47 வது பக்கத்தில் நான் Approved on 19.01.2023 என்று எழுதி கையெழுத்திட்டுள்ளேன். Ex.M2 வரிசையில் பக்கம் எண்கள்.13,16,20,38,42,47,48 ஆகியவற்றில் approved on என்று எழுதி தேதியிட்டு நான்தான் கையெழுத்திட்டுள்ளேன். மேற்படி ஆவணங்கள் விசாரணை அதிகாரியின் முன்பும் குறியீடு செய்யப்பட்டது.

5. 19.09.2023 அன்று திரு.S.ருத்ர நாராயணனை நான் குறுக்கு விசாரணை செய்துள்ளேன் என்றால் இல்லை. அதேபோல 25.09.2023 அன்று மேற்படி சாட்சியை நான் தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்துள்ளேன் என்றால் இல்லை. 16.10.2023 அன்று MW2 விசாரணை

LINGESWARAN DHARMALINGAM
Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.23 17:16:28 +0530

அதிகாரி முன்பு விசாரணைக்கு ஆஜரானார் என்றால் சரிதான். மேற்படி ரேவதியை நான் குறுக்கு விசாரணை செய்தேன் என்றால் இல்லை. 01.11.2023 அன்று விசாரணையின்போது விசாரணை அதிகாரி என்னிடம் "Are you given due opportunity and sufficient time to represent your case from the commencement of enquiry till date”? என்று கேள்வி கேட்டு அதற்கு நான்" Yes, I was provided these sufficient time and opportunity from the commencement of the enquiry.”என்று பதிலளித்ததாக Ex.M1 வரிசையில் பக்கம் 24 ல் எழுதப்பட்டு அந்த பக்கத்தில் நானும் கையெழுத்திட்டிருக்கிறேன் என்றால் சரிதான். ஆனால் அவ்வாறு அவராகவே எழுதிக்கொண்டார்.

6. Ex.M1series ல் பக்கம் 26 ல் கையால் எழுதப்பட்டிருப்பவற்றை நான்தான் எழுதி கையெழுத்துகள் இட்டிருக்கிறேன். விசாரணை அதிகாரி சொல்லித்தான் அவ்வாறு எழுதினேன். அதில் நான் "sufficient time and opportunity given to me from the commencement of the enquiry to still today by enquiry officer”என்று எழுதி கையெழுத்திட்டிருக்கிறேன். அதையும் விசாரணை அதிகாரி சொல்லித்தான் எழுதினேன். என்மீதான விசாரணையின்போது நான் கேட்ட எல்லா ஆவணங்களையும் வழங்கி கால அவகாசம் கேட்டபோதெல்லாம்அதனையும் வழங்கி

LINGESWARAN DHARMALINGAM
Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.23

விசாரணையின்போது இரண்டு சாட்சிகளையும் குறுக்கு விசாரணை செய்ய போதுமான வாய்ப்புகளையும் வழங்கி, விசாரணை முடிவறிக்கை தாக்கல் செய்த பின்பு என்னிடம் விளக்கங்கள் கேட்கப்பட்டு, அதற்கும் கால அவகாசம் வழங்கப்பட்டு, இரண்டு விளக்கங்களும் பெறப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டு, நான் திருப்தியுறும் அளவிற்கு எல்லா வாய்ப்புகளும் வழங்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டது என்றாலும் அவற்றையெல்லாம் மறைத்து பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

LINGESWARAN DHARMALINGAM

Digitally signed by LINGESWARAN DHARMALINGAM
Date: 2025.09.23 17:16:51 +0530